1982 பிப்ரவரி 15]

THIRU L. Elayaperumal : My very important question was not answered உதவித் தொகை வாங்குபவர்களுக்கு ஏஜ் எக்சம்ஷன் கொடுப்பார்களா? அல்லது எவ்வளவு காலத்திற்குக் கொடுக்கப் போகிறார்கள்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்விக்கு ஏற்கனவே அமைச்சர் பதிலளித்து விட்டார்.

ஐ. டி. ஐ. மாணவர்களுக்கான வினாத்தாள்களைத் தமிழில் வழங்கும் திட்டம்

*வினா எண். 219—திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) I. T. I. மாணவர்களுக்கு வினாத்தாள்கள் ஆங்கிலத்தில் கொடுக்கப்படுவது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) தமிழ் மொழியில் வினாத்தாள் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) ஆம்.

(ஆ) வினாத்தாள்கள் டெல்லியிலுள்ள "தொழில்கள் சம்பந்தப்பட்ட பயிற்சிக்கான தேசிய மன்றத்தால்" ஆங்கிலத்திலும், இந்தியிலும் தயாரிக்கப்பட்டு எல்லா மாநிலங்களுக்கும் விநியோகிக்கப்படுகின்றன. வினாத்தாள்கள் தேர்வு நடக்கும் சமயத்தில்தான் பிரிக்கப்படுகின்றன. எனவே தொழிற் பயிற்சி நிலைய மாணவர்களுக்குத் தமிழில் வினாத்தாள்களை வழங்க இயலவில்லை. எனினும் தேர்வு நடக்கும் சமயம் வினாத்தாள் களை அந்த இடத்திலேயே வாய்மொழியாக தமிழில் மொழி பெயர்த்துத் தேர்வு எழுதும் பயிற்சியாளர்களுக்குச் சொல்ல வேண்டுமென்று தொழிற்பயிற்சி முதல்வர்கள் அறிவுறுத்தப் பட்டுள்ளார்கள்.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவரவர் களே, ஐ. டி. ஐ. மாணவர்களுக்கு விடை எழுதுவதற்கு மட்டும் தமிழில் அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். ஆனால் வினாத் தாள்கள் மட்டும் ஆங்கிலத்தில் தான் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, அந்த மாணவர்கள் சரியாகப் புரிந்து கொண்டு சரியான முறையில் விடை அளிக்க முடியாத காரணத்தால் மீண்டும் அரசு பரிசீலனை செய்து வினாத்தாள்களைத் தமிழில் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, புதுடெல்லியிலே இருக்கக்கூடிய வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறைத் தலைமை இயக்குநரோடு இது குறித்துப் பேசப்பட்டிருக்கிறது. ஆனால் அவர்கள் தமிழில்

வினாத்தாள்கள் அனுப்பப்பட்டால் அது ஒரு முன்மாதிரியாக அமைந்து, ஏனைய மற்ற மாநில மொழிகளிலும் அனுப்பப்பட வேண்டுமென்பதற்காகவும், போதுமான மொழிபெயர்ப்பாளர்கள் பற்றாக்குறையாலும், வினாத்தாள்களுடைய இரகசியத்தைப் பாதுகாக்கும் பொருட்டும் தமிழில் வழங்க இயலாது என்று தெரிவித்திருக்கின்றார்கள். ஆகவே, இத்தகைய அடிப்படையின் கீழேதான் தொழிற்பயிற்சி நிலைய முதல்வர்களுக்கு வினாத் தாள்களை விநியோகிக்கின்றபொழுது தேர்வு நடக்கின்ற இடங்களிலேயே மொழி பெயர்க்க வேண்டுமென்ற ஆணையை அரசு பிறப்பித்திருக்கிறது.

திரு. மு. அப்பாதுரை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அரசாங்கத்தினுடைய எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற அந்தக் கொள்கை என்னவாயிற்று ஆகவே, மீண்டும் பரிசீலனை செய்து, அவர்களை உற்சாகப் படுத்துகின்ற வகையில், டெக்னிக்கல் வார்த்தைகளைப் புரிந்து கொள்ள, ஆட்சிச் சொல் அகராதி அளிக்கப்பட்டிருப்பதைப்போல் அந்த மாணவர்களுக்கு டெக்னிக்கல் சொல்லகராதியைக் கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்கின்ற கருத்தின் அடிப் படையிலே, வருங்காலங்களில், இதை நடைமுறைப்படுத்த, மீண்டும் அரசு புது டெல்லியில் இருக்கக்கூடிய தலைமை இயக்குநரோடு கலந்து பேசும்.

திரு. ஈஸ்வரமூர்த்தி என்கிற பி. சொரணம் : பேரவைத் தலைவர் அவர்களே, சிவில் கோர்ட்டிலே மாத்திரம் அல்ல, மற்ற எல்லா கோர்ட்டுகளிலும் தமிழில் தீர்ப்பு எழுத வேண்டுமென்ற நிலையை அரசு எடுத்திருக்கும்போது, இதற்கு மாத்திரம் கால தாமதம் செய்வது சரியாக இருக்குமா என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புவதோடு, எவ்வளவு சீக்கிரமாக, சர்க்கார் இதை அமுல்படுத்த முன்வரும் என்பதைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எவ்வளவு சீக்கிரம் முடியுமோ, அவ்வளவு சீக்கிரம் நடவடிக்கை எடுக்கும்.

பள்ளாபாளையம் கிராம அரிசனக் குடியிருப்புகளுக்கு ஏற்பட்ட தீ விபத்து.

* வினா எண். 220—திரு. ப. செ. சென்னிமலை என்கிற கந்தசாமி : மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூர் வட்டம் பள்ளாபாளையம் கிராம அரிசன மக்களின் வீடுகள் தீப்பிடித்து எரிந்தது உண்மையா?